**குச்சவெளி பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள் -

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குச்சவெளி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வரவு செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குச்சவெளி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்ட 04 புனர்நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 2,657,096 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செலுத்த வேண்டிய தொகை நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,757,037 பெறுமதியான 68 தையல் இயந்திரங்கள், 150 மின்சார கேத்தல்கள் மற்றும் 18 நீர் தாங்கிகள் என்பவைகள் நிலையான சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் திருத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மேற்படி |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 863,106 செலவில் நிர்மாணிக்கப்பட்ட தாய்சேய் பராமரிப்பு நிலையத்தின் பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய தொகையை நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலச்சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கூட்டுப் பெறுமதி ரூபா 217,210,559 தொகையான 04 கணக்கு விடயங்களிற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இனிவரும் காலங்களில் நிலையான சொத்து பதிவேடு பொருத்தமான சான்றுகளும் சமர்ப்பிக்கப்படும். | ஆவணங்கள் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள் -

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் -

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| 149 பிரிவு | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 10 உல்லாச விடுதிகளிடமிருந்து உரிமைத் தீர்வைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உல்லாச விடுதிக்கான உரிமைத் தீர்வை அறவிடப்படுகிறது. நிலுவையாக உள்ள உல்லாச விடுதிகளுக்கு கடிதம் மூலமான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| 571(1), (2),(3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 31,849,992 தொகையான 36 வைப்புக்கள் தொடர்பில் சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 27,318,991 ஆக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 34,206,395 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 15,615,360 | 38,540,360 | 15,334,449 | 23,206,000 | 22,224,000 | 32,791,000 | 9,866,000 | 22,925,000 |
| (ii) | வாடகை | 6,575,400 | 20,490,400 | 2,609,370 | 17,881,030 | 8,382,000 | 16,571,000 | 2,656,000 | 13,915,000 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 2,085,200 | 2,896,593 | 2,896,592 | - | 5,975,000 | 1,987,000 | 1,987,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,762,200 | 1,347,328 | 1,347,328 | - | 1,943,000 | 4,304,000 | 4,304,000 | - |
| | கூட்டுத் தொகை | 26,038,160 | 63,274,681 | 22,187,739 | 41,087,030 | 38,524,000 | 55,653,000 | 18,813,000 | 36,840,000 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் வீதவரி நிலுவை ரூபா 23,206,000 ஆக இருந்தது. அவ் ஆண்டின் பட்டியலிடப்பட்ட ரூபா 38,540,360 இற்கு ஒப்பாக 60 சதவீதமான கூடிய பெறுமதியொன்றை கொண்டிருந்தது. | இது தொடர்பாக விரைவாக நடவடிக்கை மேற் கொள்ளப்படும். | நிலுவைகளை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கல் மீது பெற வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 14,014,830 ஆக இருந்தது. அதில் ரூபா 12,179,493 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய நிலுவை மீதி ஒன்று காணப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். | பழைய நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டில் மின்சாரசபைக்கு செலுத்தி தீர்க்க வேண்டிய ரூபா 5,497,455 வீதி விளக்குகளிற்கான மின்சாரக் கட்டண நிலுவைத் தொகையினை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | தற்போது கட்டம் கட்டமாக வீதி விளக்கு மின்சார கட்டண நிலுவைகள் செலுத்தப்பட்டு வருகிறது. | நிலுவைகள் செலுத்தும் நடவடிக்கையினை துரிதப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய (EPF) சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம், ஊழியர் நம்பிக்கை நிதிய கொடுப்பனவு காலம் தாழ்த்தியதனால் தண்டப்பணமாக ரூபா 1,915,306 தொகை செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தன. | இக் கட்டணம் தொடர்பில் உரியவர்களிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய காலத்தில் கட்டணம் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் சபையின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடம் ரூபா 1,531,440 தொகைக்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ரூபா 743,637 தொகை செலுத்தப்பட்ட நிலையில் கைவிடப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக சபைக்கு போதியளவு வருமான இன்மை காரணமாகவும் இந்நிலை ஏற்பட்டது. | உரிய நோக்கத்தினை அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆண்டு ரூபா 24,444,588 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச்சந்தைக் கட்டடித் தொகுதியினை பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | LDSP மூலமாக எதிர்காலத்தில் அரிசி ஆலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கட்டடத்தினை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நூலகங்களில் இலத்திரனியல் முறைமையுடன் ஊடாக சேவை வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,992,850 பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்களை அக் குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறிப்பிட்ட நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 03 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன், விழா முற்பணம் ரூபா 572,802 தொகையினை 05 வருடங்களிற்கு மேலாக அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இவற்றை பதிவழிப்பது தொடர்பான AMC கலந்துரையாடலுக்கு அமைவாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் முற்பணத்தினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தகுதிகாண் காலத்தை பூர்த்திசெய்த 03 உத்தியோகத்தர்களின் பதவிகளினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் பரீட்சைத் திணைகளத்திற்கு அனுப்புவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளுக்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் இலக்கு அடைந்து கொள்வதற்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பாக சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | உரிய நோக்கத்தினை அடைய திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |